This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஓடாதே

www.writersujatha.com

## முதலிரவில் துவங்கும்

### 1

மீராவை இற்றைக்கு சற்றேறக்குறைய 63 தினங்களுக்கு முன்னால் "ஆனந்த் யார்?" என்று கேட்டிருந்தால் "தெரியாது" என்று பதில் சொல்லியிருப்பாள். இன்று ஆனந்த் அவள் கணவன்.

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படாத உபரியான பல இந்தியத் திருமணங்கள் "சுமங்கலி"யிலும், "ஹிண்டு"வின் ஞாயிற்றுக்கிழமை விளம்பரங்களிலும் நிச்சயிக்கப்படுகின்றன. சுமங்கலி ஜூன் எண்பத்தேழு இதழுக்கு சென்னையில் உள்ள ஒரு வங்கியில் டிமாண்டு டிராப்ட்டாக ரூபாய் அம்பது அனுப்பி விளம்பரம் செய்து வெளிவந்த ஒரு வாரத்திற்குள் ஜபல்பூரிலிருந்து ஒரு இன்லண்டு லெட்டர் வந்தது. ஆனந்தின் அப்பா எழுதியிருந்தார்.

பையன் மயிலாப்பூரில் லஸ் கார்னர் அருகில் முருடீஸ் லாட்ஜுக்கு அடுத்த கட்டத்தில் மேல் மாடியில் தனிரூமில் இருக்கிறான். அவனை நேரில் சந்தித்து பெண்ணைக் காட்டி, அவன் சம்மதித்து விட்டால், நாங்கள் வந்து கல்யாணம் பார்க்கிறோம் என்று எழுதியிருந்தார்.

மீராவின் அப்பா சுந்தரமூர்த்தி உடனே மயிலாப்பூர் போக, அந்தப் பையன் அஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட மாடி அறையில் தலைவாரிக் கொண்டிருந்தவன் உடனடியாக வந்து பெண் பார்க்கிறேன் என்றான். சுந்தரமூர்த்திதான் நாள் நன்றாக இல்லை என்று வெள்ளிக்கிழமை பெண் பார்க்க ஏற்பாடு செய்துவிட்டு வந்தார்.

பையன் பி.காம். ஏ.ஸி.ஏ. என்றும், சர்க்கார் வசமான பாங்கில் ப்ராபேஷனரி ஆபீசர் என்றும், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதும் தெரிந்தது.

வெள்ளிக்கிழமை ஆனந்த் பெண் பார்க்க வந்தபோது, மீராவின் தங்கையை மீரா என்று எண்ணிக்கொண்டு, 'மிஸ், உங்ககூட ஒரு நிமிஷம் பேசலாமா!' என்றான்.

அதற்கு அவள், "தாராளமா" என்றாள்.

பிழைதிருத்தம் முடிந்து மீராவைத் "தனியாக" பால்கனிக்கு அழைத்துச் சென்றபோது, அவள் தம்பி தங்கைகள் அடைகாக்க, ஜன்னல் வழியாக மீராவின் பாட்டி பார்த்துக்கொண்டிருக்க, தமாஷாக நிகழ்ந்தது அந்த உரையாடல்.